மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை—திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை,
இ.ம.எண்.6/2025
இன்
அ.வ.எண்.184/2018
————

கணகம்மாள் ...மனுதார்/2 ம்பிரதிவாதி

/எதிர்/

1) முருகன் ...1 ம்எதிர்மனுதாரர்/வாதி

2) கார்த்திகைசெல்வி ...2 ம்எதிர்மனுதார்/1 ம்பிரதிவாதி

இம்மனுவானது 03.03.2026 இன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.மகேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1)** 23.12.2020 ம் தேதியில் மனுதாரர்/2 ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி இம்மனு ஆர்டர் 9 ரூல் 13 சி.பி.சி.—யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்—**

**2(1)** மனுதாரர் அசல் வழக்கில் 2 ம்பிரதிவாதி ஆவார். வழக்கில் தன்னை கட்சியாக சேர்க்க வேண்டி வாதி தாக்கல் செய்த இ.ம.எண்.92/2019 ன்படி தனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று வழக்கறிஞர் மூலம் கடந்த 28.03.2019 ல் நீதிமன்றத்தில் ஆஜராகி, பின்பு மனு அனுமதிக்கப்பட்டு அசல் வழக்கில் ஆஜராக அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. மனுதாரருக்கு வயோதிகம் காரணமாக உடல்நலம் சரியில்லாமல் போன காரணத்தினால் அது குறித்து வழக்கறிஞரை சந்தித்து நீதிமன்றத்தில் ஆஜராக

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.03 16:37:47 +0530

முடியவில்லை என்பதால் 13.02.2020 ம் தேதியில் தனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 23.12.2020 ம் தேதியில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு 22.10.2022 ம் தேதி வாதி தபசில் சொத்து தனக்கு தீர்ப்பாகிவிட்டது என்று கூறி தனது இடத்தில் இடையூறு செய்ய முயற்சி செய்ததால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரம் கேட்ட போது தனக்கு எதிராக 23.12.2020 ம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிய வந்தது என்றும், அதனை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தபோது மத்தியஸ்தர்கள் தங்களுக்கும் சமரசம் பேசி வாதி கிரைய ஆவணத்தில் கூடுதலாக தனது இடம் உட்பட குறிப்பிட்டுள்ள இடத்தினை அளவீடு செய்து தனது அனுபவத்தில் உள்ள இடத்தை விட்டுவிட்டு மீதி உள்ள இடம் வாதிக்கும் என பேசி முடித்தார்கள். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.222/2018 நிலுவையில் இருந்ததால் அளவீடு செய்து விவரங்களை வழக்கில் பதிவு செய்து முடித்துக்கொள்வோம் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

2(2) அதனால் ஷை வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல்நடத்தவில்லை. பின்பு இருதரப்பு வழக்கறிஞர், நில அளவையர் சேர்ந்து அளவீடு செய்ய வேண்டும் என தீர்மானித்து ஒன்று சேர்ந்து அளவீடு செய்ய முடியாமல் காலம் கடந்து போய்விட்டதால், இறுதியாக 24.02.2024 ம் தேதி தபசில் சொத்தினை அளவீடு செய்த போது வாதி தனது வசம் உள்ள இடத்தில் பாதியை கொடுத்தால் தான் சமரசத்திற்கு உடன்படுவேன் என்று தெரிவித்துவிட்டதால் அது தோல்வியடைந்துவிட்டது என்றும், தங்களுக்குள் சமரசம் ஏற்பட்டதின் காரணமாக மனுதாரர் குறிப்பிட்ட காலத்தில் வழக்கை கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அ.வ.எண்.222/2018 விசாரணை பட்டியலிடப்பட்ட நிலையில் தனது தரப்பும், வாதி தரப்பும் சமரசம் ஏற்பட்டு நில அளவீடு செய்து வழக்கை முடித்துக்கொள்வதாக நீதிமன்றத்தில்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.03 16:37:53 +0530

தெரிவித்து வந்த நிலையில் பட்டியலிடப்பட்ட வழக்கு என்பதால் தனது தரப்பில் முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துபின்பு சமரசத்தை பதிவு செய்துகொள்வோம் என புரூப் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது சமரசம் தோல்வியடைந்ததால் வழக்கை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விவரமும், இந்த வழக்கின் சொத்து விவரமும் ஒரே சொத்து என்பதால் இரண்டு வழக்கையும் சேர்ந்து நடத்தினால் தான் நியாயம் கிடைக்கும் என்றும், ஆகவே தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இல்லாவிடில் அளவு கடந்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>3) 1 ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்—</u>

அ.வ.எண்.222/2018 வழக்கின் தபசில் சொத்தும், இந்த வழக்கின் தபசில் சொத்தும் வேறு என்றும், அ.வ.எண்.222/2018 வழக்கினை நாட்கடத்தவும், எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிக்க செய்யும் எண்ணத்தில் தவறான சங்கதிகளை கூறி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவில் கண்ட சங்கதிகளை எதிர்மனுதாரர்/வாதி ஒப்புக்கொள்ளவில்லை என்றும், அதனை ஆட்சேபிக்கிறார் என்றும், ஆகவே மனுதாரின் மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

<u>4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை—</u>

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்/2 பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியதா?

<u>5) நீதிமன்ற பரிசீலனை—</u>

**5(1)** மனுதாரர்/2 ம்பிரதிவாதி அசல் வழக்கு மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் 1 ம்தபசில் சொத்தில் ஒரு பகுதியான 2 ம்தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்து, 2 ம்தபசில் சொத்தை

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.03 16:37:59 +0530

எதிர்மனுதாரர்/வாதி அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**5(2)** மனுதாரர்/2 ம்பிரதிவாதி இ.ம.எண்.92/2019 மனு மூலம் கட்சி சேர்க்க தாக்கல் செய்த மனு அறிவிப்பினை மனுதாரர் பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜராகி அந்த மனுவும் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்/2 ம்பிரதிவாதியாக பிராதில் சேர்க்கப்பட்டு பிராது சம்மன் மனுதாரர் பெற்றுக்கொண்டு மனுதாரர் வயோதிகத்தின் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் போனதால் அவரது வழக்கறிஞரை சந்தித்து நீதிமன்றத்தில் ஆஜராக முடியாததால் 13.02.2020 ல் ஒருதலைபட்ச உத்தரவும், 23.12.2020 ல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அதன் பின்னிட்டு எதிர்மனுதாரர் 23.10.2022 ல் மனுதாரர்/2 ம்பிரதிவாதி அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சி செய்ததால் மனுதாரர் அவரது வழக்கறிஞரை சந்தித்து கேட்டபோது தான் 23.12.2020 ல் ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிய வந்ததாகவும், ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்த போது சமரசம் பேசுவதாக காலம் கடத்தி வந்ததால் குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்கை கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த மனுதாரர் அ.வ.எண்.222/2018 தாக்கல் செய்து, அசல் வழக்கு விசாரணைக்கு வரப்பட்டுள்ளதால் அந்த வழக்கின் சொத்து விவரமும், இந்த வழக்கின் சொத்து விவரமும் ஒரே சொத்து என்பதால் இரண்டு வழக்கையும் சேர்த்து நடத்தினால் தான் நியாயம் கிடைக்கும் என்பதால் அசல் வழக்கில் இம்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(3)** 1 ம்எதிர்மனுதாரர் மறுப்புரையில் அ.வ.எண்.222/2018 வழக்கின் தபசில் சொத்தும், இந்த வழக்கின் தபசில் சொத்தும் வேறு என்றும், அ.வ.எண்.222/2018 வழக்கை நாட்கடத்தவும், எதிர்மனுதாரரை அலைக்கழிக்க

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.03 16:38:05 +0530

வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5(4)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் மனு அபிடவிட்டில் மனுதாரர்/2 ம்பிரதிவாதியின் வயது 60 ஆக குறிப்பிடப்பட்டுள்ளார். அசல் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 54 வயது மனுதாரருக்கு இருந்து வந்துள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லும் வயோதிக உடல்நலம் சரியில்லாமல் போனவர், உடல்நோய் சம்பந்தமாக ஆவணம் மூலம் குறிப்பிட்டு கூறாமல் அதற்கு ஆவணம் தாக்கல் செய்யாமலும், சாட்சிகளை விசாரணை செய்யாமல் மனுதாரர்/2 ம்பிரதிவாதி 1 ம்எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண்.222/2018 வழக்கினை கட்டாய விசாரணைக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட பின்னர் அந்த வழக்கின் விசாரணையை தொடர்ந்து காலதாமதப்படுத்த வேண்டி இடைநிலைமனு தாக்கல் செய்து இந்த மனுவினை காரணம் காண்பித்து நாட்கடத்தி வந்து மனுதாரர்/2 ம்பிரதிவாதி அசல் வழக்கின் ஒவ்வொரு Stage–லும் வழக்குடன் இருந்து வந்து வழக்கு விவரம் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்து வந்திருப்பதும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் தாவா சொத்து சம்பந்தமாக சமரசம் பேசிக்கொண்டதாக கூறுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாமல் இருந்து வந்து, வயோதிகம் காரணமாக உடல்நலம் சரியில்லாமல் போனது என்ற சங்கதிகளை மட்டும் குறிப்பிட்டு இந்த நீதிமன்றத்தில் போதிய காலஅவகாசம் கொடுத்து அதனை பயன்படுத்தாமல் இருந்து வந்த மனுதார் மிகுந்த காலப்பிற்பாடாக மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கு போதிய காரண காரியங்கள், சான்றாவணங்கள் தாக்கல் செய்யாமல், அசல் வழக்கு எண்.222/2018 வழக்கின் தாவா சொத்து சர்வே எண்.187/1 ல் கதவு எண்.429/B/5 க்கு இந்த வழக்கின் தாவா சர்வே

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.03 16:38:11 +0530

எண்.187/54, 52 கதவு எண்.5/46, 5/46A என்று வெவ்வேறான கதவு எண்களும், புல எண்களும் உள்ள நிலையில் ஒரே சொத்து என்று மனுதாரர் குறிப்பிட்டு 23.12.2020ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு, தீர்ப்பாணையை ரத்து செய்ய காலதாமதம் ஏற்பட்டது என்று மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது 10.03.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டிருப்பதாலும், மனுதாரர் எதிர்வழக்குரையுடன் மனு தாக்கல் செய்திருப்பதாலும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.222/2018 வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வெவ்வேறு வழக்கு தாக்கல் செய்வதை தவிர்ப்பதற்காகவும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது தான் சட்டப்படியும், நியாயப்படியும் உகந்தது என்று முடிவு செய்து மனுதாரரின் மனு அனுமதிக்கப்படுகிறது.

6) **இறுதியாக,** மனுதாரரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 03.03.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.03 16:38:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்–இல்லை.
எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்– இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.03 16:38:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.6/2025
இன்
அ.வ.எண்.184/2018
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்–03.03.2026